Summar Vaction Salary

*134 Q—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, as per ROC. 91194/G9/77, dated 25th May 1977 of the Director of School Education, permanent teachers, who have undergone B.Ed., on leave during the year 1975-76 have been denied the drawal of summer vacation salary; and

(b) if so, the reasons therefor?

கோடை விடுமுறை ஊதியம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநரின் 25—5—1977ஆம் நாளிட்ட ROC. 91194/G9/77ஆம் ஆணைப்படி, பி.எட். பயிலுவதற்காக 1975—76 ஆம் ஆண்டில் விடுப்பில் சென்ற, நிரந்தர ஆசிரியர்களுக்குக் கோடைக்கால விடுமுறை ஊதியம் வழங்க மறுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) பள்ளி ஆண்டில் 8 திங்களுக்குக் குறையாமல் பணி செய்து கோடை விடுமுறைக்கு முன் பள்ளியிறுதி நாளன்று பணிசெய்த ஆசிரியர்கள் விடுமுறை ஊதியம் பெறத் தகுதியுள்ளவர்கள். அவ்வாறு பணிபுரியாதவர் களுக்கு விடுமுறை ஊதியம் அளிக்க விதிகள் இடமளிக்கவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்த ஆண்டுக்கு முன்னால் பல பள்ளிகளிலே பயிற்சிக்குச் சென்ற ஆசிரியர்கள் பணியாற்றிய காலம் 8 மாத காலத்திற்குக் குறைவாக இருக்கிறது. அவர்கள் விடுமுறைக் கால ஊதியம் கேட்டிருக் கிறார்கள். அவ்வாறு பணிப் பயிற்சிக்குச் சென்ற ஆசிரியர்களுக்கும், இந்த 8 மாத காலம் பணியாற்றியிருக்கவேண்டும் என்ற உத்தரவை மாற்றி, விடு முறைக்கால ஊதியம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதுள்ள விதிகளின்படிதான் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

1978 பிப்ரவரி 25]

திரு. எம். சங்கரலிங்கம்: பதவியிலே நிரந்தரம் பெற்ற ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு அனுமதி பெற்று, பயிற்சி பெற்று பிறகு கடைசி வேலே நாள் மட்டும் வந்து வேலே பார்த்தால், கோடை விடுமுறை ஊதியம் பெறத் தகுதியுள்ளவர் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிருர்கள். இதுவரை இருந்த நிலைமையை மாற்றி, 1977-லே ஒரு புதிய உத்தரவு வந்ததிலிருந்து இந்த உரிமையைப் போக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடைசி நாளன்று வந்து பணி செய்பவர்களுக்கு விடுமுறை ஊதியம் இருக்கிறது என்பதுதான் நான் இப்போது சொல்லியிருக்கும் பதில்.

திரு. பி. ஆர். தாமஸ் : முதலிலே சொல்கின்ற விதியிலே 8 மாதம் வேலே பார்த்து 'ஸ்டடி லீவ்' என்ற விடுமுறையிலிருந்து வந்து, கடைசி நாள் மட்டும் வேலே செய்யவேண்டும் என்று புதிதாக உத்தரவு இருக்கிறது. இதற்கு முன்னல் இருந்த ஆணையினுல் அப்படி உரிமை பெருத பல ஆசிரியர்கள் கோடைக்கால விடுமுறை ஊதியம் வாங்க முடியாத நிலே ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசிலனே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதை ஒரு ஆலோசனேயாக எடுத்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : தற்காலிகமாக ஒரு குறிப்பிட்ட ஆண்டிலே பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களும் அவ்வாறு 8 மாத காலமாவது குறைந்தது பணியாற்றியிருக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே பல ஆண்டுகள் பணியாற்றியிருப்பார்களானுல், நிரந்தர ஆசிரியர்களுக்குக் கிடைப்பது போல, பயிற்சிக்குச் சென்ற அந்த ஆசிரியர் களுக்குக் கோடைக் கால ஊதியத்தை வழங்க அரசு முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த யோசனேயையும் ஏற்றுக் கொள்கிறேன்.

Sterilization Operations.

*135 Q.—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that teachers were required to bring in a certain number of persons for sterilization operations under the "Family Welfare Scheme" during the Emergency period;

(b) if so, the details, thereof;